இலங்கை வங்கி Smart Salary Saver கணக்கு				
கணக்கின் தன்மை	**வாடிக்கையாளருக்கான நன்மைகள்**	**ஆரம்ப வைப்புகளும் கட்டணங்களும்**	**தகுதி**	**முக்கியமான விதிகளும் நிபந்தனைகளும்**
மாதச் சம்பளம் பெறும் நபர்களுக்காகவும் தகுதிவாய்ந்த தொழில்வாண்மையினருக்காக அறிமுகப்படுத்தப்பட்ட இக்கணக்கு மேலதிக வட்டி வருமானத்தையும் கணக்குரிமையாளர்களின் நிதித் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு சம்பள முற்பணக்கொடுப்பனவு வசதியையும் வழங்குகிறது.	**வட்டி வீதம்** நிதி முகாமைத்துவக் கணக்கு சாதாரண சேமிப்புக் கணக்கற்கானவட்டி வீதம் தற்போதுள்ள வட்டி வீதங்களை https://www.boc.lk/ratestariff#rupee-deposit-rates என்ற இணைப்பிற் சென்று பார்வையிடவும் **சேவைக் கட்டணங்கள் இல்லை**	**ஆரம்ப வைப்பு –** ரூ. 2,000 **கணக்கை மூடுவதற்கான கட்டணம்** – ரூ. 500 **கணக்கைப் பராமரித்தலும் பிற கட்டணங்களும்** - ATM அட்டை வழங்கல் - அச்சடிக்கப்பட்ட கூற்றுகள் - கணக்குப் புத்தகத்தின் நகல் ஒன்றை வழங்குதல் - கணக்குமீதிகளை உறுதிப்படுத்தல் - நிலையியற் கட்டளைகள் பதிவும் பண அனுப்பல்களும் - குறுஞ்செய்திக் கட்டணம் - ATMஇல் பணம் மீளப்பெறும் எல்லைகளை மாற்றுதல் - இணைய வங்கிச் சேவைக் கட்டணங்கள் கட்டணத் தொகைகளை அறிந்து கொள்ள https://www.boc.lk/rates-tariff#general-tariff என்ற இணைப்பிற்குள் செல்லுங்கள் **வரிகள் –** வட்டியானது இலங்கை அரசாங்கத்தால் மற்றும்/அல்லது கட்டுப்பாட்டு அதிகாரசபையால் அல்லது வங்கியால் காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தப்படும் முற்பண வருமான வரி, பிற வரிகள், அறவீடுகள் (ஏதும் இருந்தால்), சட்டரீதியான வரிகள் என்பவற்றுக்கு உட்பட்டவையாகும்.	மாதச் சம்பளம் பெறும் நபர்கள் அல்லது தகுதிவாய்ந்த தொழில்வாண்மையினர் தமது மாதாந்த வருமானத்துக்கான சான்றினைச் சமர்ப்பித்து இக்கணக்கினைத் திறக்கலாம். • விண்ணப்பதாரி இலங்கையை வதிவிடமாகக் கொண்டவராகவும் 18 தொடக்கம் 65 வயதுக்கு இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். • மாதாந்தம் வங்கிக்கு வரவிடப்படும் தேறிய சம்பளம் 25,000 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும் • தனிநபர் கணக்காகவோ கூட்டுக் கணக்காகவோ திறக்கலாம். **கணக்கைத் திறப்பதற்கான நடைமுறைகள்** இலங்கை வங்கியின் **ஸ்மாட் சலறி சேவர்** கணக்கினைத் திறப்பதற்கான விண்ணப்ப படிவத்தையும் **நிதி முகாமைத்துவ** விண்ணப்பத்தையும் பூர்த்திசெய்து பின்வரும் ஆவணங்களுடன் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கையளித்தல் வேண்டும். - தேசிய அடையாள அட்டை / தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ள செல்லுபடியான கடவுச்சீட்டு - தேசிய அடையாள அட்டையிலுள்ள முகவரியும் தற்போது வசிக்கும் முகவரியும் வேறு வேறு எனின் முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் - விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் இருந்து கணக்குத் திறக்கப்படும் கிளை தொலை தூரத்தில் அமைந்திருந்தால் அக்கிளையில் கணக்குத் திறப்பதற்கான வலிதான காரணங்கள்.	இக்கணக்குடன் தொடர்புபட்ட அனைத்து விதிகள், நிபந்தனைகளையும் பற்றி அறிய கணக்குத் திறக்கும் படிவத்தைப் பார்க்கவும்.

காப்புறுதி வைப்பு / அங்கீகரிக்கப்படாத (தவறுதலான) கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் / செயற்படாக் கணக்குகள்

- வைப்பாளர் ஒருவருக்கு அதிகபட்சம் 1,100,000 ரூபாய் வரையிலான நட்ட ஈட்டுக்கான பொருந்தக்கூடிய காப்புறுதியை செலுத்துவதன் மூலம் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.
- அங்கீகரிக்கப்படாத/தவறுதலான பரிவர்த்தனை ஒன்று கண்டறியப்பட்டால், அதனை உடனடியாக வங்கிக்கு அல்லது கணக்குப் பேணப்படும் கிளைக்குத் தெரிவிக்க வேண்டும்.
- ஒரு (01) வருட காலத்திற்கு பணம் மீளப்பெறல்/கொடுப்பனவு செயற்பாடுகள் எதுவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், ஒரு வருட முடிவில் குறித்த கணக்கு 'செயலற்ற' கணக்காக மாறும்.
- இவ்வாறான கணக்குகள் 10 வருடங்களுக்கு மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால், அந்த கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக கருதப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படும்.

உங்களுடைய பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

- பின்வரும் வழிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் பின்னூட்டங்களையும் முறைப்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்;
- எங்கள் வாடிக்கையாளர் அனுபவ முகமைத்துவப் பிரிவு மூலம் உங்கள் பாராட்டுகள் / முறைப்பாடுகள் என்பவற்றை நீங்கள் பதிவு செய்யலாம். தானியங்கு அமைப்பு மூலம் உங்கள் கோரிக்கைகள் முன்னுரிமையுடன் கவனிக்கப்படும்.

தொலைபேசி: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலைநகல்: +94 11 243 5815 மின்னஞ்சல்: **bocexmgt@boc.lk** இணையத்தளம்: https://www.boc.lk

அஞ்சல்: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22ஆவது மாடி, இலங்கை வங்கிக் கோபுரம், இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எங்கள் கிளைகள், சேவைப் பிரிவு அல்லது அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள், எங்கள் கணக்குகள் அல்லது சேவைகள் தொடர்பான ஏதேனும் கருத்துகள்/சந்தேகங்கள் இருப்பின் எங்கள் கிளைகளை நாடலாம் அல்லது 1975 என்ற எண்ணின் ஊடாக அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.